செய்தி வெளியீடு எண்: 424 நாள்:11.07.2021

## செய்தி வெளியீடு

### சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 311ஆவது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டுச் சென்னை எழும்பூரில் அவரது சிலைக்கு, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரைப் பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழாக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 311ஆவது பிறந்தநாளை முன்னிட்டுச் சென்னை, எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தத் திருவுருவப்படத்திற்குத் தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், இன்று (11.07.2021) மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் வீரத்தையும் வரலாற்றையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், தூத்துக்குடி மாவட்டம், கட்டாலங்குளத்தில் உள்ள அன்னாரது நினைவு மண்டபத்தில் ஆண்டுதோறும், அன்னாரது பிறந்தநாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில், சென்னை எழும்பூர், இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின்கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தத் திருவுருவப் படத்திற்கு இன்று **(11.07.2021)** காலை **9.30** மணியளவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் இ.பரந்தாமன் அவர்கள், டி.கே.ஜி.நீலமேகம் அவர்கள் கலந்துகொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் (செய்தி), இணை இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**